செ. கு. எண்:178 நாள் :10.07.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.7.2013

நீலகிரி மாவட்டம், கூடலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. V.பாஸ்கரன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 21.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C. ரவி அவர்கள் 21.6.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் கிருஷ்ணகிரி – ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் பத்தலப்பள்ளி என்ற இடம் அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், ஊரகக் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. கண்ணப்பன் அவர்கள் 23.6.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.இளங்கோவன் அவர்கள் உடல்நலக் குறைவால் 25.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.மாரிமுத்து அவர்கள் உடல்நலக் குறைவால் 26.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப் படை பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N. அருள்தாஸ் அவர்கள் உடல்நலக் குறைவால்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 26.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகரம், பொன்மலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N. செல்வமணி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 28.6.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திருமதி ஜெயந்தி அவர்கள் 28.6.2013 அன்று பிரசவத்தின் போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் அருள்தாஸ்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பாஸ்கரன், கண்ணப்பன், இளங்கோவன், மாரிமுத்து; தலைமைக் காவலர்கள் ரவி, செல்வமணி; காவலர் ஜெயந்தி ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர் அருள்தாஸ், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பாஸ்கரன், கண்ணப்பன், இளங்கோவன், மாரிமுத்து, தலைமைக் காவலர் செல்வமணி; சாலை விபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் ரவி; மற்றும் பிரசவத்தின் போது உயிரிழந்த காவலர் ஜெயந்தி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**